**<u>District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi</u>.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.6**

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : திருமதி. முனியம்மாள்
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.01.2023.

<u>முதல் விசாரணை</u>:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் எங்கள் ஊரிலுள்ள ரோட்டில் நின்று கொண்டிருந்தேன். போலீசார் வந்தார்கள். என்னிடம் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். ஊருக்கு வந்ததாக சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி</u>:–

அரசு தரப்பு வழக்குரைஞர், சாட்சி வழக்கு குறித்து அரசு தரப்பிற்கு எதிராக கூறியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அரசு தரப்பின் கோரிக்கை ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– கடந்த 14.01.2021ம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் எங்கள் ஊருக்கு போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஊரில் நடந்த சண்டை பற்றி தெரியாது. நான் அன்றைய தினம் சாந்தகுமார் வீட்டின் வழியாக சென்றபோது போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். நான் எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் எதிரிகள் கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi</u>.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.5**

Deposition of witness for Prosecution
Defence
Court

Name : திருமதி. சத்யா
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.01.2023.

<u>முதல் விசாரணை</u>:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2021ம் வருடம் பொங்கல் தினத்தன்று ஊரில் சண்டை நடந்தது. நான் சண்டையை பார்க்கவில்லை. ஊரிலுள்ளவர்கள் சாந்தகுமார் என்பவரை இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பார்க்க சென்றார்கள். நானும் சென்று பார்த்தேன். சாந்தகுமாருக்கு பின் தலை மற்றும் கையில் காயம்பட்டிருந்தது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் விசாரணையிலும் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்பதை கூறியுள்ளேன். போலீசார் எப்பொழுது என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசார் என்னை என் வீட்டில் வைத்துதான் விசாரித்தார்கள். நான் சென்னையிலிருந்து அன்று தான் எங்கள் ஊருக்கு வந்திருந்தேன். அ.சா.1 எனக்கு அண்ணன் முறை வேண்டும். எனது உறவினர்தான். நீங்கள் கூறியவாறு உங்களிடம் சம்பவம் நடைபெற்றதாக சொன்னதாக நீங்கள் கூறிய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. நீங்கள் அ.சா.1 உங்களது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.4**

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : திரு. கனகராஜ்
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.01.2023.

முதல் விசாரணை:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து சிவில் இஞ்ஜினியராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். நான் இவ்வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. விஜயகுமார் என்பவர் சாந்தகுமார் என்பவரை அடித்து விட்டதாக சொன்னார்கள். கடந்த 2021ம் ஆண்டு பொங்கல் விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்த போது ஊரில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை சென்று காயம்பட்டு சிகிச்சையிலிருந்த சாந்தகுமாரை பார்த்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை:–

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது முதல் விசாரணையில் கூறியது போல் தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். என்னை போலீசார் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை எந்த காவலர் விசாரித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை சம்பவத்தன்றே இரவே போலீசார் விசாரித்தார்கள். நீங்கள் கேள்விப்பட்டதாக கூறுகின்ற சம்பவம் ஏதும் நீங்கள் கூறியது போல் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 உங்களது மாமா என்றால் சரிதான். உங்களது மாமா உங்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.